**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11 ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**I.A.No.03/2025 In O.S.No.31/2025**

1. முருகன்
2. ரேகுமுத்துபாண்டியன் ... மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிராக//**

1. ஆறுமுகம்
2. மருதமுத்து
3. சார்பதிவாளர், தரகம்பட்டி
4. உயர்திரு. மாவட்ட ஆட்சியர், கரூர் மாவட்டம்.

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 03.11.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ரமேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.முத்துமாணிக்கவேலன் அவர்கள் முன்னிலையாகியும், 3 மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

அசல் வழக்கு விசாரணை முடியும் வரை மனு சொத்தில் உள்ள மனுதாரர்களின் அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் எவ்வித இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் வாதி. தாவா சொத்தானது விவசாய நிலம் என்றும், 2 ம் வாதி மற்றும் 2 ம் பிரதிவாதி இருவரும் சகோதரர்கள். 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதியின் தகப்பனார். 1 ம் பிரதிவாதிக்கும், ஈஸ்வரிக்கும் பிறந்த பிள்ளைகள் தான் 2 ம் வாதி மற்றும் 2 ம் பிரதிவாதி. 1 ம்

பிரதிவாதி தனது மனைவியான ஈஸ்வரியையும், இரண்டு பிள்ளைகளையும் தனியே விட்டுவிட்டு வேறு திருமணம் செய்துகொண்டு சென்று விட்டார். பின்னிட்டு ஈஸ்வரியையும், அவரது குழந்தைகளையும் 1ம் வாதி பராமரித்து வந்தார். அனைவரும் ஒரே குடும்பமாக வசித்து வந்தனர்.

2) 1ம் வாதி தனது சுய சம்பாத்தியத்தில் 1ம் வாதியையும், 2ம் பிரதிவாதியையும் படிக்க வைத்து நல்ல முறையில் திருமணம் செய்து வைத்தார். இந்நிலையில் 2ம் பிரதிவாதி 1ம் வாதியையும், 2ம் வாதியையும் அவரது தாயாரையும் உதாசினப்படுத்திவிட்டு தனிக்குடித்தனம் சென்று விட்டார். இந்நிலையில் 1ம் வாதி மற்றும் ஈஸ்வரியின் சுய சம்பாத்தியத்தில் தாவா சொத்துக்கள் ஈஸ்வரி பெயரில் கிரையம் பெறப்பட்டது. ஈஸ்வரிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தாவா சொத்தை 1ம் வாதி மற்றும் 2ம் வாதி பெயரில் 30.09.2021 அன்று உயில் எழுதி வைத்து விட்டு 09.04.2024 ல் ஈஸ்வரி இறந்துவிட்டார். அவரது இறப்பிற்கு பின்னிட்டு தாவா சொத்துக்களை 1,2 வாதிகள் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகின்றனர்.

3) இந்நிலையில் தாவா சொத்துக்கள் மீது வில்லங்கம் ஏற்படுத்த 11.12.2024 அன்று 1,2 பிரதிவாதிகள் ஒன்று சேர்ந்துக்கொண்டு ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளனர். மேற்படி ஆவணத்தை வைத்து மனுதாரர்களின் சுவாதீனத்தில் இடையூறு செய்து வருகின்றனர். எனவே மனுதாரர்களால் தாவா சொத்தில் விவசாயம் செய்ய முடியாமல் பெரும் சிரமமாக உள்ளது. எனவே இவ்வழக்கு முடிவடையும் வரை தாவா சொத்தில் மனுதாரர்களின் சுவாதீனத்திற்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது என எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

4) எதிர்மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையை இம்மனுவின் எதிருரையாக ஏற்றுக்கொள்ள குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**

5) வழக்குரையில் உறவுமுறை பற்றி குறிப்பிட்டுள்ள சங்கதி உண்மையாகும். வழக்குரை பத்தி 3 மற்றும் 4 ல் சொல்லியுள்ள சங்கதிகள்

உண்மையாகும். 2ம் பிரதிவாதிக்கு திருச்சியில் உள்ள அண்ணா பல்கலைகழகத்தில் உதவியாளராக வேலை கிடைத்த காரணத்தால் தினமும் வந்து செல்ல சிரமமாக இருந்ததால் 1ம் வாதி மற்றும் அவரது தாயார் ஈஸ்வரி ஆகியோர்கள் திருச்சியிலேயே தங்கி பணிபுரிய கூறியதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதி திருச்சியில் தங்க நேரிட்டது.

6) வழக்குரை பத்தி 6ல் சொல்லியுள்ளவாறு சொத்துக்கள் ஈஸ்வரியின் பெயரில் கிரையம் பெறப்பட்டது உண்மையாகும். ஆனால் 1ம் வாதியின் சம்பாத்தியத்தில் மேற்படி சொத்துக்கள் வாங்கப்படவில்லை. 1ம் பிரதிவாதியின் மூத்த சகோதரர் பெருமாள், காளியப்பன், சகோதரி காமாட்சி மற்ற சகோதரர் 1ம் வாதி ஆகியோர்களுக்கு கடவூரில் சொத்துக்கள் இருந்தது. இதில் பெருமாள் என்பவருக்கு திருமணமாகி குழந்தைகள் இல்லாமல் சொத்துக்களை விட்டுவிட்டு இறந்துவிட்டார். காளியப்பன் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார். அத்தை காமாட்சி குழந்தை இல்லாமல் இறந்துவிட்டார். மேற்படி 3 நபர்களின் பெயரில் உள்ள சொத்துக்களை விற்பனை செய்து வந்த வருமானத்தைக் கொண்டும், 2ம் பிரதிவாதியின் தாயார் ஈஸ்வரி வருமானத்தைக் கொண்டும், ஈஸ்வரி பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது.

7) 1ம் வாதியின் வருமானத்தைக் கொண்டு எந்த சொத்துக்களும் வாங்கப்படவில்லை. 06.01.2024ல் ஈஸ்வரியால் எந்த ஒரு உயில் ஆவணமும் ஏற்படுத்தப்படவில்லை. தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் வாதிகளால் மேற்படி ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்கள் கிடைக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் மேற்படி ஆவணம் தயாரிக்கப்பட்டது.

8) 1,2 பிரதிவாதிகள் தான் இறந்துபோன ஈஸ்வரிக்கு அனைத்து இறுதி சடங்குகளையும் செய்தனர். 1ம் பிரதிவாதி பெயரில் தான் ஈஸ்வரியின் வாரிசு சான்றிதழில் கணவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஈஸ்வரி இறந்த பின்னிட்டு 2ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் சம்மதத்தின் பேரில் சொத்துக்கள் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டது. அதன்படி 1ம் பிரதிவாதிக்கு கிடைத்த பாகத்தின் ஒரு பகுதியை 2ம் பிரதிவாதிக்கு 10.12.2024ல் ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார். தாவா சொத்தின் மீது 1ம் வாதிக்கு எவ்வித

உரிமையோ, பாத்தியமோ கிடையாது. இவ்வழக்கில் கூறப்பட்டுள்ள வழக்கு மூலம் பொய்யானது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளனர்.

9) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

10) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2–1,2 மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டை ஆகும். ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.4– இறந்துபோன ஈஸ்வரியின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ். மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் இறந்து போன ஈஸ்வரிக்கு 1ம் பிரதிவாதி, 2ம் வாதி மற்றும் 2ம் பிரதிவாதி வாரிசுகள் என்பதை அறிய முடிகிறது.

11) ம.சா.ஆ.5 முதல் ம.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்துக்களுக்கான ஈஸ்வரி பெயரில் கிரைய ஆவணங்கள். மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், தாவா சொத்துக்கள் ஈஸ்வரி பெயரில் பல்வேறு காலகட்டங்களில் கிரையம் பெறப்பட்டு உள்ளது என்பதை அறிய முடிகிறது. இரு தரப்பிலும் தாவா சொத்துக்கள் ஈஸ்வரி பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே ம.சா.ஆ.5 முதல் ம.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறித்து இரு தரப்பிலும் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12) ம.சா.ஆ.11–ஈஸ்வரி 1,2 வாதிகள் பெயரில் தாவா சொத்துக்களை உயில் ஆவணத்தின் மூலம் ஏற்படுத்தியுள்ளார். மேற்படி உயில் ஆவணம் ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உயில் ஆவணமானது 1ம் வாதியால் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், ஈஸ்வரி அவ்வாறு ஒரு உயில் ஆவணம் ஏற்படுத்தவில்லை என்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது.

13) ம.சா.ஆ.12–1ம் பிரதிவாதி 11.12.2024 அன்று 2ம் பிரதிவாதியின் மகன் பெயரில் ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட். வாதி தரப்பில் 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் எவ்வித உரிமையும் இல்லாமல் வில்லங்கம் ஏற்படுத்தி வருவதாகவும் ம.சா.ஆ.12 ஆவணத்தை வைத்துக்கொண்டு பிரதிவாதிகள் வாதிகளின் தாவா சொத்திலுள்ள சுவாதீனத்திற்கு இடையூறு செய்து வருவதாகவும் வாதிடப்பட்டது.

14) தாவா சொத்துக்கள் 2ம் வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதை இரு தரப்பிலும் ஒப்புக்கொண்டுள்ளனர். ம.சா.ஆ.11 உயில் ஆவணம் உண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்தும் ம.சா.1ம் பிரதிவாதி 11.12.2024 அன்று 2ம் பிரதிவாதியின் மகன் பெயரில் ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட்.ஆ.12 ஆவணத்தை ஏற்படுத்த பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளதா என்பது குறித்தும் இவ்வழக்கின் முழுமையான விசாரணைக்கு பின்னிட்டும், சாட்சியத்தின் அடிப்படையில் மட்டுமே தீர்வு காண முடியும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15) இந்நிலையில் தாவா சொத்தில் மனுதாரர்களை விவசாயம் செய்ய விடாமல் எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்து வருவதாக மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டு இவ்வழக்கு முடிவடையும் வரை இடைக்கால தடை உத்தரவு வழங்க வேண்டுமென வாதிட்டனர். தாவா சொத்துக்கள் 2ம் வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என இரு தரப்பிலும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

16) மேற்படி சொத்துக்கள் ம.சா.ஆ.11 மற்றும் ம.சா.ஆ.12ன் அடிப்படையில் தாவா சொத்துக்களுக்கு உரிமையாள1ம் பிரதிவாதி 11.12.2024 அன்று 2ம் பிரதிவாதியின் மகன் பெயரில் ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட்.ர் யார் என முடிவு செய்ய 1ம் பிரதிவாதி 11.12.2024 அன்று 2ம் பிரதிவாதியின் மகன் பெயரில் ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட்.இயலாத நிலையில் மனுதாரர்கள் கோரியுள்ள இடைக்கால தடை உறுத்துக்கட்டளை பரிகாரமானது வழங்கப்படுவதால் தரப்பினர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் மனுதாரர்கள் இவ்வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நிலையில் சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையிலேயே மேற்படி இறுதி தீர்வை எட்ட இயலும். எனவே தரப்பினர்கள் தற்போதுள்ள நிலையிலேயே தாவா சொத்தை வழக்கு முடிவடையும் வரை பராமரிப்பது

இரு தரப்பினர்களுக்கும் உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு தரப்பினர்கள் இருவருக்கும் தற்போது உள்ள நிலையிலேயே தாவா சொத்தை இவ்வழக்கு முடிவடையும் வரை பராமரிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 11ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**

–இல்லை–

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை | நகல் |
| ம.சா.ஆ.2 | – | 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை | நகல் |
| ம.சா.ஆ.3 | – | ஈஸ்வரியின் இறப்பு சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.4 | – | ஈஸ்வரியின் வாரிசு சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.5 | 15.07.1996 | ஈஸ்வரி பெயரில் உள்ள கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | 25.02.2014 | ஈஸ்வரி பெயரில் உள்ள கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.7 | 28.02.2008 | ஈஸ்வரி பெயரில் உள்ள கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.8 | 26.03.2021 | ஈஸ்வரி பெயரில் உள்ள கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.9 | 23.07.2021 | ஈஸ்வரி பெயரில் உள்ள கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.10 | 03.11.2010 | ஈஸ்வரி பெயரில் உள்ள கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.11 | 06.01.2024 | ஈஸ்வரி 1,2 வாதிகள் பெயரில் எழுதிவைத்துள்ள உயில் ஆவணம் | அசல் |
| ம.சா.ஆ.12 | 11.12.2024 | 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் மகன் பெயரில் ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட். | சான்றிட்ட நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

**–இல்லை–**

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**

*********************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**இ.ம.எண்.03/2025**
**in**
**அ.வ.எண்.31/2025**

**DRAFT / FAIR ORDER**

**D.D.11.11.2025.**

*********************************